பெயர்: .......................... தேதி: ..........................

# அடைப்புக்குறிக்குள் உள்ள வார்த்தையை சரியான வேற்றுமை உருபுடன் இணைத்து எழுது.

**சான்று:-** சிவகாசி (பட்டாசு) ________ புகழ் பெற்றது.

சிவகாசி **பட்டாசுக்குப்** புகழ் பெற்றது.

1. (தஞ்சாவூர்) ________ தயாரிக்கப்படும் தலையாட்டிப் பொம்மை மிகவும் புகழ் பெற்றது.

2. பௌர்ணமி (நாள்) ________ நிலா, வானத்தில் முழுநிலவாகக் காட்சியளிக்கும்.

3. சிறுவர்களுக்கான பாடல் (தொலைக்காட்சி) ________ ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

4. பயன்தராத (சொற்கள்) ________ ப் பேசுவதனைத் தவிர்த்தல் வேண்டும்.

5. மனித (உணர்வுகள்) ________ வெளிப்பாடுகளே கலைகளாக மலர்கின்றன.

6. போட்டியைக் காண அனைவரும் (ஆற்றங்கரை) ________ வந்தனர்.

7. உண்ணும்போது உணவுப் (பொருட்கள்) ________ சிந்துதல் கூடாது.

8. மயில் மழை (மேகங்கள்) ________ பார்த்தவுடன் நடனம் ஆடும்.

9. மன்னர் (மக்கள்) ________ நிலைமையை அறிய மாறுவேடத்தில் சென்றார்.

10. நாங்கள் மெரினாக் (கடற்கரை) ________ ச் சென்றோம்.

11. (இலை) ________ நிறம் பச்சை.

12. குதிரை உருவங்களைக் (களிமண்) ________ செய்வர்.